1974 ஏப்ரல் 17]

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் இப்படித் தரக்குறைவான விதைகள் வருவதால் அங்கேயிருக்கும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் போதிய அளவு தாங்குகிற விதைகளைப் பயிரிடுவதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 10 ஏக்கர் என்று ஒதுக்கி, விவசாய அதிகாரிகளே நேரடியாகப் பயிரிட்டு, அந்த விதைகளை விவசாயிகளுக்கு வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் சொன்னது வேறு ஒரு கருத்து. ஒன்றியங்களில் மாடல் பார்ம் அமைக்க வேண்டுமென்று கருத்து சொன்னார்கள். அதுவும் அரசின் ஆய்வில் இருக்கிறது.

Prize for Municipalities

* 849 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have decided to present every year a rolling shield to the best maintained municipality in the State; and

(*b*) if so, from when?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு நிதி ஆண்டின் முடிவிலும் இக்கேடயம் வழங்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : இப்படித் தேர்ந்தெடுக்கப்படும் பொழுது, எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ? எப்படிப்பட்ட முனிசிபாலிடிகளுக்கு இந்தப் பரிசு கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்தக் கேடயம் வழங்குவதற்கு நகராட்சிகளுக்கு சில விதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகத்திற்கு 10 மதிப்பெண், போக்குவரத்துக்கு 10, கல்விக்கு 20, பொதுசுகாதாரத்திற்கு 20, தெரு விளக்குகள் 5, குடிநீர் அண்டு வடிகால் 20, வருவாய் 5, இதர வகை 5, ஆக 100 மதிப்பெண் வைத்து, அந்த அடிப்படையில்

நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது, போக்குவரத்துக்கு வேண்டிய சாலை சரியாக இருக்கிறதா, கல்விக்காகச் செலவழிக்கப்படுகிற பணம் சரியாக செலவழிக்கப்படுகிறதா, சுகாதார வசதி சரிவர செய்துகொடுக்கப்பட்டிருக்கிறதா என்ற அடிப்படையை வைத்து மதிப்பெண்கள் குறிப்பீட்டை வைத்து, அதன்படி முனிசிபாலிடி தேர்ந்தெடுக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : பொது மக்களின் வரிப் பணத்தைப் பாழடித்துக்கொண்டு மோசமான முறையில் நிர்வாகத்தை சீர் கேடாக வைத்துக்கொண்டிருக்கிற மாயூரம் நகராட்சிக்குக் கடுமை யான தண்டனை விதிக்க அரசு ஆலோசிக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நிச்சயம் அப்படி நட வடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அமைச்சர் அவர்கள் நன்றாக நிர் வகிக்கப்படுகிற நகராட்சிக்குப் பரிசுத் திட்டம் வைத்துக் கேடயம் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். மிக மோசமாக 'வொர்ஸ்டு மேனேஜ்டு' முனிசிபாலிடிகள் என்று என்னுடைய மாவட்டத்தில் கோவை நகராட்சி, சிங்காநல்லூர் நகராட்சி ஆகிய இரண்டு முனிசிபாலிடிகளும் தங்களை விட மோசமாக நிர் வகிக்க முடியாது என்று நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக் கின்றன. அப்படிப்பட்ட நகராட்சிகளுக்கு இந்த அரசு என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கோவை, சிங்காநல்லூர் நகராட்சிகள் மிக மோசமாக நடைபெற்றுவருவதற்கு ஏதோ நிர்வாகத்தில் இருப்பவர்கள் மட்டும் காரணம் அல்ல. அங்கே இருக்கிற மற்ற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அதில் ஈடுபட்ட காரணத்தினால் தான் அந்த நிர்வாகம் சரியாக செயல்பட முடியவில்லை என்று எங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு, இன்னும் நல்ல முறையில் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : நகராட்சிகளுக்கு மட்டும் கேடயங்கள் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏன் சிறப்பாக நடக்கும் பேரூராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும்

1974 ஏப்ரல் 17]

இம்மாதிரி கேடயங்கள் வழங்கக் கூடாது? அதோடுகூட, கேடயங்கள் வழங்குவதற்குப் பதிலாக அந்த நகராட்சிக்கென்று ஒரு சிறப்பான திட்டத்தை அமல்படுத்தலாமே? அவர்கள் கோரியுள்ள ஒரு திட்டத்தை உடனடியாக அரசு செயல்படுத்துவதன் மூலம் அந்த ஊர் மக்களுக்கு ஒரு நல்ல பலன் கிடைக்குமே? ஆகவே, கேடயத்துக்குப் பதிலாக ஊருக்குத் தேவையான ஒரு திட்டத்தை அமல்படுத்துவது பற்றி அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்பொழுது கொடுக்கப்பட்டிருப்பது ஸ்போர்ட்ஸ்மென்ஷிப் என்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. எல்லா நகராட்சிகளும் நல்ல முறையில் இயங்க வேண்டும் என்பதற்காக இது வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பரிசு மாவட்ட அளவில், மாநில அளவில் வைக்கப்பட்டிருக்கிறது. பேரூராட்சிபற்றியும் கவனிக்கப்படும். தனியாக அதற்காக நிதி ஒதுக்கி ஒவ்வொரு ஊருக்கும் என்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்று பார்த்து அதைப் பரிசாக அளிப்பதற்கு இப்பொழுது இயலாது.

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன்: சில நகராட்சிக்குள்ள வருமானம் எல்லாம் எஸ்டாபிளிஷ்மெண்டுக்கே அதிகமாகச் செலவழிந்துபோய், ஜனங்களுக்கு வசதி செய்வதற்கு காபிடல் எக்ஸ்பெண்டிச்சர் செய்வதற்குப் பணம் ஒதுக்கமுடியாத நிலையில் பட்ஜெட்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் ஆராய்ந்து, இன்ஸ்பெக்ஷன் செய்து வருமானத்தில் எந்த அளவுத் தொகையை ஜனங்களுக்கு அதிகமாகப் பயன்படும்படி செலவு செய்வதற்கு, காபிடல் எக்ஸ்பெண்டிச்சருக்கு எவ்வளவு பணம் ஒதுக்கலாம் என்று பரிசீலனை செய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நகராட்சிகள் நிதி நிலையைப்பற்றி ஆராய்வதற்கு இப்பொழுதே ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் கிடைத்ததற்குப் பிறகு அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.